வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.5238/ஆ5/2022, நாள். 15.12.2022

பொருள் : சட்டமன்ற அறிவிப்பு - 2022-2023-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை - அறிவிப்பு எண்.22 - வள்ளற்பெருமானாரின் 200-ஆவது வருவிக்க உற்ற ஆண்டு - முப்பெரும் விழா எடுத்தல் - பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடத்துவது - தொடர்பாக.

பார்வை : வேலூர், இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.6688/ஆ3/2022, நாள்.09.12.2022.

########

பார்வையில் காணும் கடிதத்திற்கிணங்க தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2022-2023-ஆம். ஆண்டு மானிய கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் 04.05.2022 அன்று கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

<u>அறிவிப்பு எண்.22</u>

உயிர்த்திறன் ஒன்றெனக்கோரி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் வெருமானாரின் தருமசாலை துவக்கிய 156-ஆவது ஆண்டு தொடக்கமும் (25.05.2022), வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200-வது ஆண்டு தொடக்கமும் (05.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152-ஆவது ஆண்டும் (05.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்களையும் இணைத்து அவரது 200-வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் எனவும், இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வள்ளலார் முப்பெரும் விழா நடைபெற அரசாணை (நிலை) எண்.214, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை (அநி-1), நாள்.30.08.2022-ல் அனுமதி அளித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களின் தலைமையில் 14 உறுப்பினர்களை கெண்ட குழு அமைத்து 52 வாரங்களுக்கும் விழா நடத்துவது தொடர்பாக 03.09.2022 அன்று நடத்தப்பட்ட சிறப்புக்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் 52 வாரங்களுக்கும் விழா நடைபெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வள்ளலார் பெருமான் இவ்வுலகுக்கு வருவிக்கவுற்ற 200-ஆவது ஆண்டு விழாவின் கோலாகல தொடக்க விழா 05.10.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் முதலாம் வார விழா துவக்கப்பட்டு வள்ளாலார் முப்பெரும் விழாவின் சின்னம் (LOGO) வெளியிடப்பட்டுள்ளதாகவும் ஆணையர் அவர்களின் கடித குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

திரு. அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் முப்பெரும் விழா தொடர்பாக தமிழகத்தில் விழா நடைபெறும் வகையில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் போட்டிகள் நடைபெற ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், வள்ளலார் முப்பெரும் விழா இரண்டாம் கட்டமாக 10 வாரங்களுக்கு 10 முக்கிய நகரங்களில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளதெனவும், இதில் 13-வது வாரத்தில் 25.12.2022 அன்று வேலூர் நகரத்தில் இவ்விழா சிறப்பாக நடத்திடவும் ஆணையர் அவர்களின் கடித குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதலால், மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும், மாணவ, மாணவிகளுக்கு ஓவியம், பாடல் பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் மற்றும் பல கலை நிகழ்ச்சிகளை நடத்திடவும். ஆணையர் அவர்களின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இணைப்பில் காணும் கடிதத்தில் குறிப்பிட்டவாறு அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு-
இணை ஆணையர் அவர்களின் -
கடித நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
நகல்
வேலூர் மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை,
இணை ஆணையர் அவர்களுக்கு
(தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.)

//ப.த.//

இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்
ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர் ,
சென்னை-34.

பெறுநர் ( மின்னஞ்சல் மூலம்)
அனைத்து இணை ஆணையர்கள்

ந.க.எண்.51366/2022/எச்3 / நாள்.08.11.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : சட்டப்பேரவை அறிவிப்பு - 2022 -2023 மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது - வள்ளல் பெருமானாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் எடுக்கப்படுவதற்கான இடங்களில் சொற்பொழிவிற்கான தலைப்புகள் குறித்த விவரம் தெரிவித்தல் - தொடர்பாக

பார்வை :
1. மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பு நாள்.04.05.2022
2. அரசாணை (நிலை)எண் 214 சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை( அநி -1) நாள் 30.08.2022
3. இவ்வலுவலக ந.க.எண்.51366/2022/எச்3 / நாள்.13.9.2022
4. வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக்குழு உறுப்பினர் திரு.A.P.J அருள் என்ற இளங்கோ கடிதம் நாள்.04.11.2022
5. செயல் அலுவலர், வள்ளலார் தெய்வ நிலையம், வடலூர் கட்செவி அறிக்கை நாள். 04.11.2022

--------

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2022-2023 ஆண்டு மானிய கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அறிவிப்பு எண் 22:

" உயிர்த்திறள் ஒன்றெனக்கருதி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானாரின் தருமசாலை துவக்கிய 156 வது ஆண்டு தொடக்கமும் (25.05.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200 வது ஆண்டு தொடக்கமும் (05.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152- வது ஆண்டும் (05.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200 வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்"

எனவே, வள்ளலார் முப்பெரும் விழா நடைபெற பார்வை 2ல் அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. டாக்டர்.பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களின்

தலைமையில் (அன்னார் உட்பட) 14 உறுப்பினர்களை கொண்ட குழு அமைத்து 62 வாரங்களுக்கும் விழா நடத்துவது தொடர்பாக 03/09/2022 அன்று நடத்தப்பட்டது. மேலும் வள்ளலார் பெருமான் இவ்வுலகுக்கு வருவிக்கவுற்ற 200ஆவது ஆண்டு விழாவின் கோலாகல தொடக்க விழா 05.10.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் முதல் நிகழ்ச்சி துவக்கி வைக்கப்பட்டு அன்றைய தினமே வள்ளலார் முப்பெரும் விழாவின் சின்னம் (LOGO) வெளியிடப்பட்டது.

பார்வை 3ல் காணும் குறிப்பின் மூலம் அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் வரிசை எண் 1 முதல் 10 அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவ்வறிவுரை வரிசை எண் 5ல் வள்ளலார் முப்பெரும் விழா தொடர்பாக ஓவியம், பாடல், பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் நடத்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட போட்டிகள் மற்றும் விழாவில் நடைபெறும் சொற்பொழிவுகளில் உபயோகிக்க சிறப்புகுழு உறுப்பினர் A.P.J அருள் என்ற இளங்கோ மற்றும் வடலூர், செயல் அலுவலர் அனுப்பியுள்ள கீழ்க்கண்ட தலைப்புகளை தேவைப்படும் பட்சத்தில் உபயோகத்துக்கொள்ள சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

பொதுவான தலைப்புகள்

1. உண்மை பொது நெறியாம் சுத்த சன்மார்க்கம்
2. வள்ளலார் கண்ட ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை
3. வள்ளலாரின் மகாபேருபதேசம்
4. வள்ளலாரின் நான்கு விண்ணப்பங்கள்
5. வள்ளலாரின் முடிபான 28 பாசுரங்கள்
6. முதல்வர் காணும் முப்பெரும் விழா
7. வள்ளுவரும் வள்ளலாரும்
8. தமிழும் வள்ளலாரும்
9. வள்ளலாரின் அறிவுப்பு மடல் 12.04.1871
10. திரு அகவல் சிறப்பு
11. வள்ளலார் கண்ட சாலை சங்கம் சபை
12. சுத்த சன்மார்க்கக் கொடியும் பாடலும்
13. சுத்த சன்மார்க்க மரபுகள் நான்கு
14. கருணை விருத்திக்கு தடையாக சாதியும் சமயமும்
15. சுத்த சன்மார்க்கம் காட்டும் சமரசம்
16. சாதி பொய்
17. ஜீவகாருண்யமே இறைவீட்டின் திறவுகோல்
18. வள்ளலாரின் சாகா கல்வி
19. மரணமில்லா பெருவாழ்வு
20. வள்ளலார் பெற்ற ஒளி வடிவம்
21. வள்ளலார் அருளிய ஒழுக்க அட்டவணை

22.சுத்த சன்மார்க்கத்தில் ஒழுக்க நிரப்புதலே பிரதானம்
23.வள்ளலார் கண்ட தனி நெறி
24.சத்திய ஞான சபை வழிபாட்டு விதி
25.வள்ளலார் கண்ட மூலிகை அட்டவணை
26.பன்முக ஞானி வள்ளலார்
27.சங்கத்தார்களின் தகுதிகள் ஒழுக்கங்கள்
28.எழு திரைகள் விளக்கம்
29.முதல்வர் போற்றும் வள்ளலார்

## 6 ம் வகுப்பு முதல் 8 ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர்களுக்கான போட்டித் தலைப்புகள்

### I. பேச்சுப்போட்டி

1. வள்ளலாரின் வாழ்வியல்
2. தாவர உணவு பழக்கத்தின் சிறப்பியல்புகள்
3. வள்ளலார் நிகழ்த்திய அற்புதங்கள்
4. கொலை, புலை தவிர்த்தல் கோட்பாடு
5. வள்ளலாரின் இரக்கச் செயல்கள்
6. வள்ளலாரின் மனித நேயம்

### II. கட்டுரைப் போட்டி

1. வள்ளலார் கூறும் மருத்துவம்
2. வள்ளலாரின் சமுதாயத் தொண்டு
3. மனுமுறை கண்ட வாசகம் கூறும் நீதிகள்
4. வடலூரின் சிறப்புகள்
5. வள்ளலாரின் உயிர் நேயம்
6. வள்ளலாரின் சமத்துவப் பார்வை

### III. இசைப்போட்டி– திருஅருட்பா பாடல்கள் இசையுடன் பாடுதல்

| | | |
|---|---|---|
| 1. | அருட்ஜோதி தெய்வம் எனை... | பாடல் எண். 3992 (6ஆம் திருமுறை) |
| 2. | தாயாகி, தந்தையுமாய்... | பாடல் எண். 4008 (6ஆம் திருமுறை) |
| 3. | கல்லார்க்கும், கற்றவர்க்கும்... | பாடல் எண். 3842 (6ஆம் திருமுறை) |
| 4. | அப்பா நான் வேண்டுதல்... | பாடல் எண். 3615 (6ஆம் திருமுறை) |
| 5. | அருளார் அமுதே சரணம், சரணம்... | பாடல் எண். 2962(முதல்5திருமுறை |

### IV. ஒப்புவித்தல்– மனப்பாடம் திருஅருட்பா பாடல்கள்

| | | |
|---|---|---|
| 1. | அன்பெனும் பிடியுள்... | பாடல் எண். 3272 (6ஆம் திருமுறை) |
| 2. | திருவிளங்க... | பாடல் எண். 3271(6ஆம் திருமுறை) |
| 3. | பொங்கு பல சமயமெனும்... | பாடல் எண். 160 (முதல் 5 திருமுறை) |
| 4. | பெற்ற தாய்தனை மக மறந்தாலும்... | பாடல் எண். 750 (முதல் 5திருமுறை) |
| 5. | தேனென இனிக்கும்... | பாடல் எண். 824 (முதல் 5திருமுறை) |

V. ஓவியப்போட்டி–

1. சத்திய ஞானசபை
2. சத்திய தருமச்சாலை
3. சித்திவளாகத் திருமாளிகை
4. வள்ளலார் கருங்குழி இல்லம்
5. வள்ளலார் மருதூர் இல்லம்

## 9 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரையிலான மாணவ, மாணவியர்களுக்கான போட்டித் தலைப்புகள்

I. பேச்சுப்போட்டி

1. வள்ளலார் அருளிய ஜீவகாருண்யம்
2. வள்ளலார் கருங்குழி இல்லத்தின் சிறப்பியல்புகள்
3. சுத்த சன்மார்க்க உணவு முறைகள்
4. மனுமுறை கண்ட வாசகம் கூறும் நல்வழிகள்
5. வள்ளலாரின் கல்விச் சிந்தனைகள்
6. வள்ளலார் மாணவர்களுக்கு கூறும் மாண்புகள்

II. கட்டுரைப் போட்டி

1. வள்ளலார் அருளிய வாழ்வியல் ஒழுக்க நெறிகள்
2. வள்ளலாரின் அருள்நெறிகள்
3. வள்ளலாரின் உரைநடைப்பகுதி
4. வள்ளலாரின் அணுக்கத் தொண்டர்கள்
5. வள்ளலார் ஒரு புரட்சியாளர்
6. வள்ளலார் நிறுவிய நிறுவனங்கள்

III. இசைப்போட்டி– திருஅருட்பா பாடல்கள் இசையுடன் பாடுதல்

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்.. | பாடல் எண். 5480 (6ஆம் திருமுறை) |
| 2. | குறவர் குடிசை நுழைந்தாண்டி... | பாடல் எண். 2975 (முதல் 5 திருமுறை) |
| 3. | வருவார் அழைத்து வாடி... | பாடல் எண். 5395 (6ஆம் திருமுறை) |
| 4. | அம்பலத்தரசே அருமருந்தே... | பாடல் எண். 5524 (6ஆம் திருமுறை) |

IV. ஒப்புவித்தல்– மனப்பாடம் திருஅருட்பா பாடல்கள்

| | | |
|---|---|---|
| 1. | அருள்விளக்கே அருட்சுடரே... | பாடல் எண். 3806 (6ஆம் திருமுறை) |
| 2. | கருவில் கலந்த துணையே... | பாடல் எண். 4120 (6ஆம் திருமுறை) |
| 3. | வானத்தின் மீது மயிலாட... | பாடல் எண். 5480 (6ஆம் திருமுறை) |
| 4. | காயெலாம் கனியென கனிவிக்கும்... | பாடல் எண். 4641 (6ஆம் திருமுறை) |
| 5. | மருந்தறியேன் மணியறியேன்... | பாடல் எண். 3335 (6ஆம் திருமுறை) |

## V. ஓவியப்போட்டி



1. உயிர்களிடத்து அன்பு
2. ஜீவகாருண்யம்
3. மனுமுறை கண்ட வாசகம்

# கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான போட்டித் தலைப்புகள்

## I. பேச்சுப்போட்டி

1. வள்ளலார் ஏற்படுத்திய கிளைச் சாலைகள்
2. வள்ளலார் அருளிய மரணமில்லா பெருவாழ்வு
3. வள்ளலாரின் பேருபதேசம்
4. சித்திவளாக திருமாளிகையின் சிறப்புகள்
5. வள்ளலாரின் பகுத்தறிவுப் பார்வை
6. வள்ளலாரின் சன்மார்க்கம்

## II. கட்டுரைப் போட்டி

1. அருட்பெருஞ்ஜோதி அகவலின் சிறப்புகள்
2. வள்ளலாரின் பேருபதேசம்
3. சுத்த சன்மார்க்க நெறி
4. ஞானசபையின் ஏழு திரை விளக்கங்கள்
5. வள்ளலாரின் அறிவியல் பார்வைகள்
6. இன்றைய சூழலில் வள்ளலாரின் சிந்தனை தேவை

## III. இசைப்போட்டி– திருஅருட்பா பாடல்கள் இசையுடன் பாடுதல்

1. ஒருமையுடன் நினது திருமலரடி... பாடல் எண். 2938 (முதல் 5 திருமுறை)
2. காய் எலாம் கனியென... பாடல் எண். 4841 (6ஆம் திருமுறை)
3. பாட்டுவித்தால் பாடுகின்றேன்... பாடல் எண். 3431 (6ஆம் திருமுறை)
4. புண்படா உடம்பும் புரைபடா மனமும்... பாடல் எண். 3700 (6ஆம் திருமுறை)

## IV. ஒப்புவித்தல்– மனப்பாடம் திருஅருட்பா பாடல்கள்

1. மகாதேவமாலை (ஏதேனும் 10 பாட்டு)... பாடல் எண். 112 முதல் 212 வரை (முதல் 5 திருமுறை)
2. காலையிலே என்றனக்கே... பாடல் எண். 461 (6ஆம் திருமுறை)
3. எத்துணையும் பேதமுறாது... பாடல் எண். 4885 (6ஆம் திருமுறை)
4. நினைந்து நினைந்து .... பாடல் எண். 4799 (6ஆம் திருமுறை)

## V. ஓவியப்போட்டி

1. ஞானசபையில் ஜோதி தரிசனம்
2. ஞானசபையின் முழுத்தோற்றம்
3. சித்திவளாகத் திருமாளிகை
4. தில்லையில் சிரித்த பிள்ளை (வள்ளலார்)
5. தருமச்சாலையின் தோற்றம்
6. கருங்குழியில் அற்புதம்

மேலும், திருவருட்பிரகாச வள்ளலாரின் அனைத்து உயிர்களிடத்தில் ஜீவ காருண்யம், சுத்த சன்மார்க்க கோட்பாடு மற்றும் பொது நோக்க கோட்பாடு குறித்த தலைப்புகளிலான விவரங்கள் அடங்கிய தொகுப்பு இத்துடன் அனுப்பப்படுகிறது. தேவைப்படும் பட்சத்தில் இதனையும் மேற்படி நிகழ்வுகளில் உபயோகித்துக்கொள்ள தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

//உண்மை நகல்/உத்தரவுப்படி//

09.11.22
கண்காணிப்பாளர்

நகல்: ( மின்னஞ்சல் மூலம்)

யு, ட்டி, இசட் பிரிவுகள் எண்ணிடல் மூலம்.
மிகை.

9/11/22